**தலைப்பு – 166 – நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 24 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 07 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 561,550,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 25 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு ரூபா 1,540,548,346 தொகையானதுடன் இது அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 22 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

(iii) இரு செலவின விடயங்களுக்கு உரித்தான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டிற்கு மிகையாக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மூலம் ரூபா 127,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ் ஏற்பாடு முழுதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) 18 சந்தர்ப்பங்களின் போது வெளிநாட்டு நிதி வளச் செயற்திட்டங்களின் இரு செலவின விடயங்களுக்கு வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 2,980,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அம் மொத்த ஏற்பாடும் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் வேறு செயற்திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(v) மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 75,248 தொகையான பொறுப்புகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) பொது வைப்புக் கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,049,416 தொகையான மீதி அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000-0000-00-0015-0076 | 906,783 |
| 6000-0000-00-0011-0575 | 142,633 |
| | 1,049,416 |

மோட்டார் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்காக 2011 ஆம் ஆண்டின் போது 6000-0000-00-0011-0575 ஆம் இலக்க வைப்புக் கணக்கிற்கு ரூபா 5,500,000 தொகை செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை பயன்படுத்தப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது ஓர் மோட்டார் வாகனத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி,

எஞ்சிய ரூபா 142,633 தொகை அரசாங்க வருமானத்திற்கு 2013 மே 31 வரையிலும் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

16601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 38,095 தொகையானதுடன் இந் நிலுவை மீதி அறவிடப்படுவதற்காக மீளாய்வாண்டின் போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கணக்காளர் சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் தலைமை வகிக்கும் உள்ளகக் கணக்காய்வு விசாரணைப் பிரிவொன்று ஒவ்வொரு அமைச்சிலும் பேணப்பட வேண்டிய போதிலும் ஒரு வருட

காலம் முதல் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் இன்றி முகாமைத்துவ உதவிச் சேவையின் ஓர் உத்தியோகத்தரையும் பயிற்சிப் பட்டதாரி ஒருவரையும் மாத்திரம் கொண்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறித்த (அ) இன் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டிற்கு ஒரு முறை உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் ஓர் பொழிப்பு தயாரிக்கப்பட்டு இது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடப்படுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிப் பிரமாணம் 134(1) மற்றும் (3) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கும் வகையில் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்து முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெனியாய நீர் வளங்கல் திட்டத்திற்கு காணிக் கையேற்பு 1984 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி 30 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2013 மே 13 ஆம் திகதி வரையிலும் இது பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இதற்காக 2006 ஆம் ஆண்டின்

போது ரூபா 560,000 தொகை கொட்டபொல பிரதேசச் செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) சிலாபம் நீர் வழங்கல் திட்டத்தின் நீர்க் குழாய் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணிப் பிரிவைக் கையேற்பதற்காக 2010 ஏப்ரல் 30 ஆம் திகதி ரூபா 1,731,875 தொகை சிலாபம் பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. நீரைக் கொண்டு வரும் முக்கிய நீர்க் குழாய் தனியார் வீட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நுழைவாய்ப் பகுதியினூடாகவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையால் வீட்டுரிமையாளரின் எதிர்ப்பின் காரணமாக கையேற்பின் தொடர் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நிதிப் பிரமாணம் 1646 | நாளாந்த ஓட்ட அட்டவணையின் மூலப் பிரதி மற்றும் மாதாந்த ஒருங்கிணைந்த அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 1647 | அமைச்சிற்கு உரித்தான வாகனம் தொடர்பான ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவையும் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 11 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1992 பெப்ரவரி 18 ஆம் திகதிய 7/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்குரிய வாகனத்தின் பதிவு இலக்கம், உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பயன்படுத்தப்படுவதற்குரிய அங்கீகாரத்துடன் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக அமைச்சின் கீழ் உள்ள சமூக நீர்ப் பொறுப்புடன் தொடர்பான மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு இரு வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. |

(இ) அரச நிதிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சின் வளாகத்தில் 04 செயலிழந்த வாகனங்கள் தரித்து வைக்கப்பட்டிருந்த துடன் அவை முறையான வகையில் |

கைதவிர்க்கப்படுவதற்கோ அல்லது இது தொடர்பாக வேறு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதிலுள்ள நலிவுகள்

வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் தவிர்ந்த ஏனைய செயற்திட்டங்களின் தாமதம் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) தேசிய நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் சபையின் மூலம் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 53 செயற்திட்டங்கள் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நீண்ட காலம் கடந்ததை அடுத்தும் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதில் 16 செயற்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் இதில் 7 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 21 செயற்திட்டங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையானதுடன் அவ் 21 செயற்திட்டங்களுக்காக மூல மதிப்பீடு ரூபா 2,593 மில்லியன் போதிலும் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மொத்தச் செலவினம் ரூபா 6,268 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, இவ் 21 செயற்திட்டங்களுக்காகவுமான மூல மதிப்பீடு 142 சதவீதத்திற்கும் மேலாக செலவிடப்பட்டிருந்தது. அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்குப் பல ஆண்டுகள் கடந்திருந்தமையாலும் பணவீக்கத்துடன் கிரயம் அதிகரித்தமையாலும் அச் செயற்திட்டங்களின் மூலம் முதலீடு செய்யப்பட்ட தொகைக்கு பிரதிபலனைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. இவ்வாறே அச் செயற்திட்டத்தை விரைவாகப் பூர்த்திசெய்யாது புதிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சாத்தியவளக் கற்கையின் மூலம் புவியியல் ஆய்வு மேற்கொள்ளப்படாது செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட சிக்கலினால் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு தாமதமாகியிருந்த சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

| நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பெயர் | 2012 திசெம்பர் 31 ஆம் திகதியின் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | |
| பெல்மதுல்லை நீர் வழங்கல் செயற்திட்டம் (Intake) | 348.00 | துலுமுவ கிணற்றில் கருங்கல் காணப்பட்டமை |
| யட்டியன்தொட்ட நீர் வழங்கல் செயற்திட்டம் | 179.35 | கருங்கல் காணப்பட்ட காரணத்தால் நீர்க் குழாய்கள் பொருத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டமை |
| பொனவிஸ்டா கந்த நீர் வழங்கல் செயற்திட்டம் | 44.03 | நீர்க் குழாய்கள் பொருத்தப்படுகையில் கருங்கல் காணப்பட்டமை. |

## 1.8 மனித வள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 13 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 82 | 61 | 21 |
| (iv) | ஆரம்ப நிலை | 39 | 24 | 15 |
| | மொத்தம் | 149 | 101 | 48 |

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 48 ஊழிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சால் முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பாகக் கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | வேறு தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| மூன்றாம் நிலை | 01 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 2007 ஆம் ஆண்டு முதல் இது வரை |
| ஆரம்ப நிலை | 02 | மேற்படி | 2012 ஆகஸ்ட் முதல் இது வரை |
| | 03 | | |